OS. 68/2025

நாள். 13.11.2025

வா.சா.1 – சௌந்தரம்

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

தாவா 1ம் இலக்க சொத்தை என் அப்பாவிடமிருந்து இனாம் ஆவணம் (வா.சா.ஆ.2) மூலம் எழுதி வாங்கும்போது அவர் அந்த சொத்து தனக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என எழுதிக்கொடுத்தது சரியா என்றால் தவறு. என் அப்பா ராணுவத்தில் வேலை பார்த்து 1979ம் ஆண்டு ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். அவர் ஓய்வுதிய பணத்தை வைத்து ஒரு வீடு கட்டினார் என்றால் சரிதான். அந்த வீட்டை பொறுத்து நான் பாகம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. மாணிக்கவேலு (1ம் பிரதிவாதி) என் அண்ணன் என்றால் சரிதான். மாணிக்கவேலு 1981ம் ஆண்டில் இராணுவத்தில் வேலைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். என் சகோதரர் மாணிக்க வேலு இராணுவத்தில் பணிக்கு சேர்ந்த பின்னர் 10.04.1989 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் மூலம் தாவா 1ம் இலக்க சொத்தில் கீழ்புறம் 13 ஏக்கர் நிலத்தை என் அப்பா மற்றும் அம்மா பெயரில் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. அதற்கு பின்னர் 1ம் பிரதிவாதி அதே சர்வே எண்ணில் 20.07.1992ம் தேதி கீழ்புறம் வடபுறமாக 6 ஏக்கர் நிலத்தை அவர் பெயரில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 20.07.1992ம் தேதியிலேயே என் தாயார் பெயரில் அதே சர்வே எண்ணில் 4 ஏக்கர் நிலத்தையும், மற்றும் அதேதேதியில் அதே சர்வே எண்ணில் 2 ஏக்கர் 10 சென்டையும் அவரது அம்மா பெயரில் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. என் அண்ணன் மாணிக்கவேலு 17.08.1992ம் தேதி என் அப்பா பெயரில் அதே சர்வே எண்ணில் 1 ஏக்கர் நிலம் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரங்களின் மூலம் பிரிவினை இல்லாத சொத்தாக கிரையம் பெறப்படாமல் தனித்தனி சொத்தாக கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். தனித்தனியாக கிரையம் பெறப்பட்ட சொத்துக்களை பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றும்,அதில் என்

தகப்பனாருக்கு பிரிவினை ஆகாத 1/3 பங்கு சொத்து பாத்தியம் உள்ளதாகவும் கண்டு வா.சா.ஆ.2 இனாம் ஆவணம் எழுதி வாங்கியுள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா 9 மற்றும் 10ம் இலக்க சொத்துக்களையும் என் தகப்பனார் பெயரில் 1ம் பிரதிவாதி மாணிக்கவேலு கடந்த 24.07.1982 தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 2, 7, 8 சொத்துக்கள் மட்டுமே பூர்வீக சொத்துக்கள் என்றும் மற்ற சொத்துக்கள் அனைத்தும 1ம்பிரதிவாதியின் சம்பாத்தியத்தை வைத்து அவரது தாய், தந்தை பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா 12, 13 இலக்க சொத்துக்களையும் மற்றும் இவ்வழக்கில்சேர்க்கப்படாத 3 இலக்க சொத்துக்களையும் என் தாயார் 2ம் பிரதிவாதிக்கு 02.07.2019ம் தேதியிட்ட இனாம் செட்டில் ஆவணம் எழுதிக்கொடுத்து பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் எழுதி வாங்கும்போது எனக்கு தெரியாது. எழுதி கொடுத்த காலத்தில் படுத்தபடுக்கையாக உடல் சுகவீனம் இன்றி இருந்தார். 2019ம் ஆண்டு 2ம் பிரதிவாதிக்கு என் தாயார் இனாம் செட்டில் மென்ட் எழுதிக்கொடுத்த காலத்தில் சுகவீனம் இன்றி இருந்தார் என்பதற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. என் கணவர் குமரேசனின் அண்ணன் நாகராஜன் என்றால் சரிதான். என் தாயார் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மென்ட் பத்திரத்தில் என் கணவரின் சகோதரர் நாகராஜன் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தின் நகல் வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த ஆவணத்தில் என் மச்சான் நாகராஜன் சாட்சி கையெழுத்து போட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. என் அம்மா உயிருடன் இருக்கும்போது 2ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மென்ட் ஆவணத்தின் நகலை நான் வாங்கி பார்த்தேன் என்றால் இல்லை. என் தாயார் நல்ல மனநிலையில் இருக்கும்போது 2ம் பிரதிவாதி மீது இருந்த அன்பினாலும், பாசத்தினாலும் இனாம்செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக்கொடுததார் என்றால் சரியல்ல. நான் இனாம்செட்டில்மென்ட ஆவணத்தின் நகல் எடுத்து பார்த்தபோதிலும் அதை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயார் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மென்ட் பத்திரத்தை நான் ஏற்றுக்கொண்டதால்தான் அந்த இனாம் பத்திரத்தில் கண்ட ஆர்எஸ்மடை கிராம சர்வே எண்.476/9, 476/21, 476/22 ஆகிய சொத்துக்களில் பாகம் கோரவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் இறந்த பின்னர் அவர் பெயரில் கிரையம் பெற்ற மற்ற சொத்துக்களை நான், என் தகப்பனார் மற்றும் சகோதரர் ஆகிய மூவரும் ஊர் வழக்கப்படி வாய்மொழியாக பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. என் தந்தை மற்றும் தாயார் பெயரில் கிரையம் பெறப்பட்ட 13 ஏக்கர் சொத்தில் பாதி இடமான 6 ½ நிலத்தையும், அதன் அருகில் உள்ள நிலத்தையும் சேர்த்து 8 ஏக்கர் 84 சென்டு நிலத்தை எனக்கும், என் தங்கைக்கும் வாய்மொழிபாகம் ஒதுக்கப்பட்டது என்றும், அதற்கு ஆதரவாகத்தான் என் தந்தை எங்களுக்கு இனாம் செட்டில் மென்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்தில் கண்ட சர்வே எண்ணில் என் அண்ணன் கிரையம் பெற்ற 6 ஏக்கர் நிலத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். ஆனால் 6 ஏக்கர் நிலத்தையும் சேர்த்து தாவா 1வது இலக்க சொத்தில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். தாவா 2 முதல் 13 இலக்க சொத்துக்களில் எனக்கும், என் சகோதரிக்கும் எந்த உரிமையுமோ, கூட்டுப்பாத்தியமோ கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு என் தாயார் எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மென்ட் பத்திரம் பற்றி 2019ம் ஆண்டிலேயே எனக்கு தெரிந்தும் அதை மறைத்து சட்ட காலத்திற்கு பின்னிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் என் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.